செய்தி வெளியீடு—1039    நாள்: 27.11.2008

<u>ஒன்றரை லட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது</u>
<u>தரமணி, வேளச்சேரி, தியாகராய நகர் பகுதிகளில்</u>
<u>கொட்டும் மழையில் 3 மணி நேரத்திற்கு மேல்</u>
<u>மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை</u>
<u>அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு தகவல்</u>

சென்னையில் தொடர்ந்து மழை பொழிவதால் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று ( 27.11.08) 2ம் நாளாக தென்சென்னையில் தரமணி, வேளச்சேரி, தியாகராய நகர் போன்ற பல்வேறு பகுதிகளில் 3 மணி நேரத்திற்கு மேல் கொட்டும் மழையில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை பார்வையிட்டு மழைநீர் அகற்றும் பணியினை துரிதப்படுத்தினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலாவதாக கோட்டூர்புரம் பாலத்தையும் தொடர்ந்து வேளச்சேரியில் எம்.ஆர்.டி.எஸ்., வீராங்கல் ஓடை, ராம் நகர், விஜய நகர், ஏ.ஜி.எஸ்.காலனி, நேதாஜி காலனி, ஆண்டாள் நகர், டாக்டர் அம்பேத்கார் நகர், என்.எஸ்.கே. நகர், கக்கன் நகர், பெரியார் நகர், கருமாரியம்மன் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சொக்கலிங்கம் நகர், மகாலஷ்மி நகர் போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் நேரிடையாக சென்று பார்வையிட்டு மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் அகற்றும் பணிகளை பார்வையிட்டும் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

<u>பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,</u>

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கடந்த 3 நாட்களாக கன மழை பொழிந்து வருகிறது. செம்பரம்பாக்கம் ஏரியில் 1000 கன அடி தண்ணீர் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 1000 கன அடி நீர் திறந்து விடப்பட உள்ளது. சென்னை மாநகராட்சி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் வடிகால்வாய்களை துரிதமாக கட்டி முடித்ததினால் கடந்த 2 நாட்களாக பொழிந்த மழை அதிகமாகத் தேங்கவில்லை. தற்பொழுது கடல் சீற்றம் காரணமாக அடையாறு கூவம் தண்ணீர் உள்வாங்கவில்லை. அதனால் பல பகுதிகளில் மழைநீர் தேக்கம் ஏற்பட்டது. சென்னையில் 400 மோட்டர் பம்புகள் பயன்படுத்தப்பட்டு மழைநீர் அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. சென்னையில் கடந்த 2 நாட்களில் சாலையில் விழுந்த 100க்கும் மேற்பட்ட மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. சென்னையில் 20க்கும் மேற்பட்ட நடமாடும் சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2 நாட்களாக ஒன்றரை லட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ள அவசர காலம் கருதி ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் நான் இன்று சென்னையிலும், அதனைத் தொடர்ந்து கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களுக்கு சென்று வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உள்ளேன் என்றார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிண்டி மடுவங்கரை, தியாகராய நகரில் வடக்கு உஸ்மான் சாலை, பிரகாசம் சாலை, ஜி.என்.செட்டி சாலை, கோட்ஸ் சாலை ஆகிய பகுதிகளை பார்வையிட்டு மழைநீர் அகற்றும் பணிகளை துரிதப்படுத்தினார். பின்பு ஜி.என்.செட்டி சாலையில் மேம்பாலப் பணிகளையும் கொட்டும் மழையில் நடந்து சென்று பார்வையிட்டார்.

மேயர் திரு.மா.சுப்பிரமணியன், ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (பணிகள்) திரு.ஆசிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., மண்டலகுழுத்தலைவர் திரு.கே.ஏழுமலை, மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9